**ஆதிபராசக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,மேல்மருவத்தூர்**

**வகுப்பு:10 இயல்:1**

**ஒரு மதிப்பெண் வினாக்கள்**

1) "அன்னை மொழியே" என்ற கவிதையில் இடம்பெறும் மன்னன்
 அ) சேரன் ஆ)சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்
2)"நற்கணக்கே" என்பதில் சுட்டப்படும் நூல்கள் எத்தனை?
 அ) 18 ஆ) 10 இ) 8 ஈ) 5
3)காய்ந்த இலையும் காய்ந்த தொகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்டபகுதி குறிப்பிடுவது
 அ) இலையும் சருகும் ஆ) தொகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
4) வேர்க்கடலை/ மிளகாய் விதை/ மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகைஅ) குலை வகை ஆ) மணி வகைஇ) கொழுந்து வகை ஈ) இலை வகை
5)மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலையைக் குறிக்கும் சொல்
 அ) அரும்பு ஆ) மலர் இ) வீ ஈ) செம்மல்
6)திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர்
 அ) பாவாணர் ஆ) கால்டுவெல்இ) இரா.இளங்குமரனார் ஈ) திரு.வி.க
7)திருவள்ளுவர் தவச்சாலை அமைந்துள்ள இடம் எது,
 அ) அல்லூர் ஆ) திருவள்ளுவர் இ) கல்லூர் ஈ) நெல்லூர்
8)தும்பி -இச்சொல்லின் பொருள்
 அ) தும்பிக்கை ஆ) வண்டு இ) துந்துபி ஈ) துன்பம்
9)நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்று பாடியவர் யார்
 அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்இ) பெருஞ்சித்திரனார் ஈ) தேவநேயப் பாவாணர்
10)தமிழ்வழித் திருமணங்களை நடத்தி வருபவர் யார்?
 அ) தேவநேயப் பாவாணர் ஆ) பெருஞ்சித்திரனார் இ) இளங்குமரனார் ஈ) பெருந்தேவனார்
11)தமிழ்த்தென்றல் என்று போற்றப்பட்டவர் யார்?
 அ) இளங்குமரனார் ஆ) பெருந்தேவனார் இ) திரு.வி.க ஈ) ம.பொ.சி
12)பன்மொழிப் புலவர் என்றழைக்கப்பட்டவர் யார்?
 அ) க. அப்பாத்துரையார்ஆ) தேவநேயப் பாவாணர் இ) இளங்குமரனார் ஈ) ஜி. யு. போப்
13)மொழிஞாயிறு என்றழைக்கப்பட்டவர் யார்?
 அ) க. அப்பாத்துரை ஆ) தேவநேயப் பாவாணர் இ) இளங்குமரனார் ஈ) ஜி. யு. போப
14) தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரை இடம் பெற்றுள்ள நூல் எது,
 அ) சொல்லாய்வுக் கட்டுரைகள்/ தேவநேயப் பாவாணர்ஆ) தேவநேயம்/ இளங்குமரனார்இ) மொழி மரபு/ மு.வ ஈ) ஆய்வியல் நெறிமுறைகள்/ பொற்கோ
15)ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களுக்கு எது அமைந்திருக்கும்,
 அ) அன்பொழுக்கம் ஆ) அறிவொழுக்கம் இ) களவொழுக்கம் ஈ) கற்பொழுக்கம்
16) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் யார்,
 அ) தேவநேயப் பாவாணர் ஆ) வெள்ளைவாரணார் இ) இளங்குமரனார் ஈ) பெருந்தேவனார்
17) உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர் யார்,
 அ) தனிநாயகம் அழகள் ஆ) தேவநேயப் பாவாணர்இ) இளங்குமரனார் ஈ) மு. வரதராசனார்
18)இந்திய மொழிகளிலேயே மேலை நாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி எது?
 அ) இந்தி ஆ) தமிழ் இ) தெலுங்கு ஈ) வங்காளம்
19)தமிழையும் கடலையும் ஒப்பிட்டுக் கவி பாடியவர் யார்?
 அ) சந்தக்கவிமணி தமிழழகனார் ஆ) இரட்டைப் புலவர்கள்
 இ) பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் ஈ) ஒட்டக்கூத்தர்
20)இரட்டுறமொழிதல் அணியின் வெறுபெயர் யாது
 அ) வேற்றுமை அணி ஆ) பிறிதுமொழிதல் அணி

இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) சிலேடை அணி
21)சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் என்ன?
அ) சண்முகமணி ஆ) சண்முகசுந்தரம்இ) ஞானசுந்தரம் ஈ) ஆறுமுகம்
22)முத்தினையும் அமிழ்தினையும் தருவதாகச் சந்தக்கவிமணி தமிழழகனார் குறிப்பிடுவது அ) மூங்கில் ஆ) கடல் இ) மழை ஈ) தேவர்கள்
23)எழில் முதல்வனின் சாகித்ய அகாதமி பரிசு பெற்ற நூல்
அ) புதிய உரைநடை ஆ) இனிக்கும் நினைவுகள்இ) யாதுமாகி நின்றாய் ஈ) எங்கெங்கு காணினும்
24)முதல் தமிழ்க் கணினிக்குச் சூட்டப்பட்ட பெயர்
அ) திருவள்ளுவர் ஆ) தொல்காப்பியர் இ) அகத்தியர் ஈ) கம்பர்
25)முதல் தமிர்க்கணினி உருவாக்கப்பட்ட ஆண்டு
அ) 1983 ஆ) 1938 இ) 1893 ஈ) 1980
26) ஒற்றளபெடையில் அளபெடுக்கும் ஒற்றெழுத்துகளின் எண்ணிக்கை எத்தனை?அ) 11 ஆ) 13 இ) 15 ஈ)12
27) சொல் திரிந்து அளபெடுப்பது என்பது
அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை இ) சொல்லிசை அளபெடை
28)குறுக்கங்கள் எத்தனை வகைப்படும்,
அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து
29)மொழியின் சிறப்புகளை அறிய துணை செய்வது
அ) கவிதை ஆ) இலக்கணம் இ) உரைநடை
30)நெட்டெழுத்து அளபெடுப்பது என்பது
அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை இ) சொல்லிசை அளபெடை

**இயல்:2**

1)தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு எப்பாடல்களைத் தாய்மொழியில் எழுதி வைத்துப்பாடுகிறார்கள்,
அ) திருமந்திரம்/ திருவாசகம் ஆ) திருக்குறள்/ திருமந்திரம்
இ) திருவருட்பா/ திருப்பாவை ஈ) திருவெம்பாவை/ திருப்பாவை
2)உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்றவர்
அ) திருமூலர்ஆ) அகத்தியர் இ) வள்ளுவர் ஈ) தொல்காப்பியர்
3) "முந்நீர்" என்பதன் பொருள்
அ) கடல் ஆ) கப்பல் இ) பயணம் ஈ) நீர்
4)"வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்"எனக் கூறும் நூல் எது,
அ) தென்றல் விடு தூது ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) புறநானூறு
5)பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது என்ற நூலின் ஆசிரியர்
அ) இளங்கோவடிகள் ஆ) ஔவையார்இ) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் ஈ) திருமூலர்
6)வளிதொழில் ஆண்ட உரவோன் ? எனக் குறிப்பிடப்படும் மன்னன்
அ) கரிகாலன் ஆ) இராசராசன் இ) இராசேந்திரன் ஈ) பாரி
7)கரிகால் பெருவளத்தானைப் புகழ்ந்து பாடிய சங்ககாலப் பெண்பாற்புலவர்
அ) ஔவையார் ஆ) ஆதிமந்தியார் இ) அள்ளூர் நன்முல்லையார் ஈ) வெண்ணிக் குயத்தியார்
8)முசிறி துறைமுகத்துக்கு விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்த கிரேக்கமாலுமி
அ) ஷிப்பாலஸ் ஆ) யுவான்சுவாங் இ) பிளைனி ஈ) தாலமி
9)உலகக் காற்று நாள்
அ) ஜுன் 15 ஆ) ஜுலை 15 இ) ஜனவரி 15 ஈ) டிசம்பர் 10
10)இந்தியாவின் முதுகெலும்பு
அ) நெசவு ஆ) வேளாண்மை இ) கட்டிடத்தொழில் ஈ) பேரளவு உற்பத்தி
11)கேட்கிறதா என் குரல் ? என்னும் பாடப்பகுதி யாருடைய குரலாக எதிரொலிக்கிறது,

அ) நிலம் ஆ) நீர் இ) காற்று ஈ) வானம்
12)சிந்துக்குத் தந்தை என்று பாராட்டப்பட்டவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கவிமணி
13)கேலிச் சித்திரம், கருத்துப்படம் போன்றவற்றை உருவாக்கியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கவிமணி
14)வெண்ணிக்குயத்தியார் என்பவர்
அ) சங்ககாலப் டிபண் புலவர் ஆ) காப்பிய நாயகி இ) பாண்டிமாதேவி ஈ) இடைக்காலப் பெண் புலவர்
15)ப்ராண-ரஸம் என்ற சொல் உணர்த்தும் பொருள்
அ) சீராக ஆ) அழகு இ) உயிர்வளி ஈ) உடல்உயிர்
16)காற்று எதைச் சுமந்து கொண்டு வர வேண்டுமென்று பாரதி அழைக்கிறார்,
அ) கவிதையை ஆ) மகரந்தத்தூளை இ) விடுதலையை ஈ) மழையை
17)புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணம்
அ) பாரதியின் வசன கவிதை ஆ) ஜப்பானியரின் ஹைக்கூ இ) வீரமாமுனிவரின் உரைநடை ஈ) கம்பரின் கவிநயம்
18)"பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
19)முல்லைப்பாட்டின் டிமாத்த அடிகள் எத்தனை?
அ) 101 ஆ) 102 இ) 103 ஈ) 104
20)பத்துப்பாட்டில் மிகக் குறைந்த அடிகளைக் கொண்ட நூல்
அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) முல்லைப்பாட்டு இ) பட்டினப்பாலை ஈ) திருமுருகாற்றுப்படை
21)"கொடுஞ்கோற் கோவலர்" இதில் குறிப்பிடப்படும் கோவலர் யார்?
அ) கோவலன் ஆ) குறவர் இ) உழவர் ஈ) இடையர்
22) "பெரிய மீசை" சிரித்தார் ? வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது, அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
23)நனந்தலை உலகம் என்பதில் "நனந்தலை" என்பதன் பொருள்
அ) கவர்ந்த ஆ) அகன்ற இ) சுருங்கிய ஈ) இழந்த
24) இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கான சொல்
அ) மலர்க்கை ஆ) அண்ணன் தம்பி இ) மார்கழித்திங்கள் ஈ) தேர்ப்பாகன்
25)"கப்பித்தான்" என்பது குறிப்பது எதைக் குறிக்கிறது,
அ) தலைமை மாலுமி ஆ) கப்பல் இ) புயல் ஈ) பயணி
26) "தெங்கான்" என்பது குறிப்பது எதைக் குறிக்கிறது,
அ) தலைமை மாலுமி ஆ) கப்பல் இ) புயல் ஈ) பயணி
28) புலம்பெயர்ந்த தமிழர்களைப் பற்றிய முதல் புதினம்
அ) புயலிலே ஒரு தோணி ஆ) தோணி வருகிறது இ) கள்ளத் தோணி ஈ) அகல்விளக்கு
29)வானிலை மாற்றத்தைக் கண்டு எழுந்து போய் பார்த்தவன்
அ) மாலுமி ஆ) பாண்டியன் இ) கப்பித்தான் ஈ) சேரன்
30)தொகை நிலைத் தொடர் எத்தனை வகைப்படும்,
அ) இரண்டு ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு

**இயல்:3**

1)"சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
2)மலைபடுகடாம் எப்படி அழைக்கப்படுகிறது,
அ) சிறுபாணாற்றுப்படை ஆ) பெரும்பாணாற்றுப்படை இ) விறலியாற்றுப்படை ஈ) கூத்தராற்றுப்படை

3)அசோக மரங்கள் எவ்வண்ணபூக்களைக் கொண்டது,
அ) கருப்பு ஆ) சிவந்த இ) வெண்மையான ஈ) நீலநிற
4) அல்கி என்பதன் பொருள்
அ) அழிந்து ஆ) தங்கி இ) உள்ளே ஈ) வெளியே
5)மலைபடுகடாமின் (கூத்தராற்றுப்படை) பாட்டுடைத் தலைவர்
அ) நன்னன் ஆ) பாரி இ) கபிலர் ஈ) பெருங்கௌசிகனார்
6)கோபல்லபுரத்து மக்கள் என்னும் கதையின் ஆசிரியர்
அ) கி. ராஜநாராயணன் ஆ) இந்திரா பார்த்தசாரதி இ) ஜெயமோகன் ஈ) ஜெயகாந்தன்
7)இடைசெவல் மக்களின் வாழ்வியல் காட்சிகளுடன் கற்பனையும் புகுத்தி எழுதப்பட்டுள்ள நூல்
அ) கோபல்லபுரத்து மக்கள் ஆ) பால்மரக்காட்டினிலே இ) சட்டைஈ) சித்தன் போக்கு
8)எப்போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்டது கோபல்லபரத்து மக்கள் என்னும் நூல்,அ) விடுதலைப் ஆ) விவசாயிகளின்இ) நெசவாளர்களின் ஈ) தொழிலாளர்களின்
9)கி. ராஜநாராயணன் எழதிய நூல் எது
அ) நாஞ்சில் ஆ) நெய்தல் இ) கரிசல் ஈ) டெல்டா
10)வட்டாரமரபு வாய்மொழிப் பஜனை கதைகள் எவ்விலக்கியம் என்று அழைக்கப்படுகின்றன,அ) நாஞ்சில் ஆ) கொங்கு இ) கரிசல் ஈ) நெய்தல்
11)காய்ந்தும் கெடுக்கிற பெய்தும் கெடுக்கிற மழையைச் சார்ந்து வாழ்கிற மானாவாரி மனிதர்களின்வாழ்க்கையைச் சொல்லும் இலக்கியங்கள்
அ) கரிசல் இலக்கியங்கள் ஆ) நெய்தல் இலக்கியங்கள் இ) கொங்கு இலக்கியங்கள் ஈ) புதினங்கள்
12)அறிஞருக்கு நூல்,அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக்காரணமாக அமைவது.
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிசடிைசால்
13)ஒரு தொடர் மொழியில் இரு சொற்கள் இருந்து அவற்றின் இடையில் சொல்லோ உருபோ இல்லாமல் அப்படியே பொருளை உணர்த்துவது
அ) தொகை நிலைத்தொடர் ஆ) தொகாநிலைத்தொடர்
இ) மரபுத்தொடர் ஈ) உவமைத்தொடர்
14)தொகாநிலைத் தொடரின் வகைகள் அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9
15)மற்றொன்று என்பது
அ) வினையெச்சத்தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்இ) இடைச்சொல் தொடர் ஈ) உரிச்சொல் தொடர்
16)ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது
அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர் இ) இரட்டுறமொழிதல் ஈ) உரிச்சொல்
17)பின்வருவனவற்றுள் முறையான தொடர்
அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
இ) தமிழர் பண்பாட்டில் வாழைஇலைக்குத் தனித்த இடமுண்டு.
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.
18) தொல்காப்பியர் விருந்து என்பதை என்னவென்று கூறியுள்ளார்,
அ) தொன்மை ஆ)புதுமை இ) இளமை ஈ) முதுமை
19)"காலின் ஏழடிப் பின் சென்று" என விருந்தினரை வழியனுப்பும் தமிழரின் இயல்பைக் குறிப்பிடும்நூல்
அ) சிறுபாணாற்றுப்படை ஆ) பெரும்பாணாற்றுப்படை இ) பொருநராற்றுப்படை ஈ) கூத்தராற்றுப்படை
20)"மருந்தே ஆயினும் விருந்தோடு உண்" என்று பாடியவர் யார்? நூல் எது?
அ) ஔவையார்/ ஆத்திச்சூடி ஆ) ஔவையார்/ கொன்றைவேந்தன்
இ) குமரகுருபரர்/ நீதிநெறி விளக்கம் ஈ) வள்ளலார்/ ஜீவகாருண்ய ஒழுக்கம்

21)விருந்தினரைப் போற்றிப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை உணர்த்தியவர்
அ) திருவள்ளுவர் ஆ) தொல்காப்பியர்இ) இளங்கோவடிகள் ஈ) செயங்கொண்டார்
22)காசிக்காண்டம் என்பது
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறு பெயர்இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
23)காசிக்காண்டத்தை இயற்றியவர் யார்?
அ) துளசிதாசர் ஆ) அதிவீரராம பாண்டியர் இ) ஔவையார் ஈ)பெருஞ்சித்திரனார்
24)முத்துக் குளிக்கும் கொற்கையின் அரசர்
அ) அதிவீரராம பாண்டியர் ஆ) கிள்ளிவளவன்இ) செங்குட்டுவன் ஈ) இரண்டாம் புலிகேசி
25)"உப்பிலாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிழ்தம் ஆகும் " என்று குறிப்பிடும் நூல் எது,
அ) சீவக சிந்தாமணி ஆ) விவேக சிந்தாமணி இ) மணிமேகலை ஈ) நளவெண்பா
26)விருந்தோம்பல் வெ்யஜும் இல்லற ஒழுக்கத்தின் பண்புகள் எத்தனை?
அ) எட்டு ஆ) ஒன்பது இ) ஆறு ஈ) பத்து
27)நறுந்தொகை என்னும் நூலின் ஆசிரியர்
அ) அதிவீரராம பாண்டியன் ஆ) கரிகாலன் இ) பாரி ஈ) பாண்டியன் நெடுஞ்செழியன்
28). நறுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் எது?
கொன்றைவேந்தன் ஆ) காசிக்கலம்பகம் இ) வெற்றிவேற்கை ஈ) காசிக்காண்டம்
29)"அருகுற" என்பதன் பொருள்
அ) அருகில் ஆ) தொலைவில் இ) அழிவில் ஈ) அழுகிய
30)திருக்குறளில் விருந்தோம்பல் அதிகாரம் இடம்பெறும் இயல்
அ) இல்லறவியல் ஆ) பாயிரவியல் இ) அரசியல் ஈ) துறவறவியல்

**இயல் :4**

1)பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது,
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
2)இயல்பான மொழிநடையை உருவாக்குதல் என்னும் மென்பொருளின் பெயர் அ) வேர்டுஸ்மித் ஆ) வேர்டுபீட்டர் இ) வேர்ட்ஸ்வொர்த் ஈ) வேர்ல்டுஸ்மித்
3) வேர்டுஸ்மித் என்பதைத் தமிழில் ---------என்று அழைப்பர்.
அ) எழுத்தாளி ஆ) எழுத்தாணி இ) எழுத்தோவியம் ஈ) குரலாளி
4)ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன்
அ) வாட்சன் ஆ) பெப்பர் இ) சோபியா ஈ) வேர்டுஸ்மித்
5)சோபியா என்னும் இயந்திரப் பெண்ணை உருவாக்கிய நிறுவனம்
அ)ஐ.பி.எம் ஆ)சாப்ட் வங்கி இ)பாரத ஸ்டேட்வங்கி ஈ)ரோபோட்டிக்ஸ்
6)இதழியலில்செயற்கைநுண்ணறிவுசெய்துள்ளகுறிப்பிடத்தகுந்த மாற்றங்களில் ஒன்று
அ)இயல்பானமொழிநடைஆ)கடினமானமொழிநடைஇ)தாய்மொழிநடை ஈ)உலக மொழிகள் இணைப்பு
7)உலக அளவில் அதிகம் விற்பனையாகும் ரோபொ
அ) வாட்சன் ஆ) பெப்பர் இ) இலா ஈ) சோபியா
8)இந்தியாவின் பெரிய வங்கி
அ) இந்தியன் வங்கி ஆ) பாரதஸ்டேட்வங்கிஇ)கனராவங்கிஈ)பரோடாவங்கி
9)செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு
அ) வன்பொருள் ஆ) மென்பொருள் இ) இயந்திர மனிதன் ஈ) கணினி ஆஸ
10)"இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்" என்று பாடியவர் அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) வைரமுத்து

www.Padasalai.Net

11. "இலா" மென்பொருள் ஒரு விநாடிக்கு உரையாடும் வாழக்கையாளர்களின் எண்ணிக்கை
அ) பத்தாயிரம் ஆ) ஆயிரம் இ) ஐயாயிரம் ஈ) பத்து
12. சாப்ட் வங்கி உள்ள இடம்
அ) இந்தியா ஆ) சீனா இ) அமெரிக்கா ஈ) ஜப்பான்
13.தமிழ்க்கல்வெட்டு காணப்படும் பிற நாடு
அ) ஆஸ்திரேலியா ஆ) சீனா இ) அமெரிக்கா ஈ) ஜப்பான்
14. பண்டையத் தமிழர் அடிக்கடி வணிகத்திற்காகச் சென்று வந்த சீன நகர்
அ) காண்டன் ஆ) சூவன்செள இ) குப்லாய்கான் ஈ) பெய்ஜிங்
15."ஸ்மார்ட்போன்" என்பதற்கு இணையான தமிழ்ச்சொல்
அ) திறன்பேசி ஆ) தொலைபேசி இ) அலைபேசி ஈ) செல்பேசி
16."உனதருளே பார்ப்பன் அடியேனே" ? யார் யாரிடம் கூறியது,
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார் இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
17)பெருமாள் திருமொழியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?
அ) 105 ஆ) 155 இ) 205 ஈ) 255
18)நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில்--------- திருமொழியாக உள்ளது பெருமாள் திருமொழி.
அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்
19). பெருமாள் திருமொழியைப் பாழடியவர் அ) திருமங்கையாழ்வார் ஆ) குலசேகராழ்வார் இ) நம்மாழ்வார் ஈ) பொய்கையாழ்வார்
20)குலசேகர ஆழ்வாரின் காலம் ------- நூற்றாண்டு.
அ) ஆறாம் ஆ) ஏழாம் இ) எட்டாம் ஈ) பத்தாம்
21)வித்துவக்கோடு என்னும் ஊர்-------- மாநிலத்தில்------ மாவட்டத்தில் உள்ளது. அ) கேரளா/ பாலக்காடு ஆ) கர்நாடகா/ மாண்டியா இ) ஆந்திர/ நெல்லூர் ஈ) கேரள/ திருவனந்தபுரம்
22)பரிபாடல் அடியில் "விசும்பும் இசையும்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறதுஅ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும் இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
23)பரிபாடல் ---------என்னும் புகழுடையது.
அ) நற்பரிபாடல் ஆ) புகழ் பரிபாடல் இ) ஓங்கு பரிபாடல் ஈ) உயர் பரிபாடல்
24)எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
அ) பரிபாடல் ஆ) முல்லைப் பாட்டு இ) நாலடியார் ஈ) மூதுரை
25)கிளர்ந்த என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை
அ) கிளர்ந்துஅ ஆ) கிளர்த்த்அ இ) கிளர்ந்த்அ ஈ) கிளர்த்(ந்)த்அ
26)முதல் பூதம் அ) வானம் ஆ) நிலம் இ) நீர் ஈ) காற்று
27)1300ஆண்டுகளுக்கு முன் திருஅண்டப்பகுதி பற்றிக் கூறியவர்
அ) மாணிக்கவாசகர் ஆ) கீரந்தையார் இ) பெருஞ்சித்திரனார் ஈ) கபிலர்
28) "தண்பெயல் தலைஇய ஊழியும்" இதில் குளிர்ந்தமழை என்னும் பொருள் தரும் சொல் அ) தண்பெயல் ஆ) தலை இ) இய ஈ) ஊழி
29)பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு
அ) 1978 ஆ) 1988 இ) 1972 ஈ) 1982 ஜவிடை: ஆஸ
30)பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகத்திலுள்ள காட்சிக் கூடங்கள்

அ) 8 ஆ) 9 இ) 10 ஈ) 15
31)தற்காலத்தின் --------------- என்று புகழப்படுபவர் ஸ்டீபன் ஹாக்கிங்.
அ) விடிவெள்ளி ஆ) நம்பிக்கைமனிதன் இ)ஐன்ஸ்டைன் ஈ) அரிஸ்டாட்டில்
32)கருந்துளைஎன்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் பயன்படுத்தியவர் அ)ஸ்டீபன் ஹாக்கிங்ஆ) ஜான்வீலர் இ) வோர்டுஸ்மித் ஈ) வாட்சன்
33)இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ------ எனப்படும். அ) வழு ஆ) வழாநிலை இ) சரியானது ஈ) வழுவமைதி
34)இடம் --------- வகைப்படும். அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு

## இயல்:5

1)மாபாரதம் தமிழ்படுத்தும் மதுராபுரி சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. ஆ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
2)மொழிபெயர்த்தல் என்னும் தொடரைத் தொல்காப்பியர் கையாண்ட இடம்
அ) பெயரியல் ஆ) வினையியல் இ) மரபியல் ஈ) உயிரியல்
3)மொழிபெயர்க்கப்பட்டதால் நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞர் யார்
அ)வி.சூ.நைப்பால்ஆ) இரட்யார்ட்கிப்ளிவ்இ)வெங்கட்ராமன்ஈ)இரவீந்திரநாத் தாகூர்
4)நம்மிடம் எல்லாம் உள்ளது என்ற பட்டை கட்டிய பார்வையை ஒழித்து அகன்ற பார்வையைத் தருவது அ) நாடகம் ஆ) மொழிபெயர்ப்பு இ) தியானம் ஈ) செல்வம்
5) மாபாரதம் தமிழ்படுத்தும் மதுராபுரி சங்கம் வைத்தும் என்று குறிப்பிடும் செப்பேட்டுக் குறிப்பு
அ) உத்திரமேரூர் ஆ) மண்டகப்பட்டுஇ) சின்னமனூர்ஈ) ஆதிச்சநல்லூர்
6)மொழிபெயர்ப்பின் மூலம் பெற்றிருக்கக்கூடிய கொள்கை
அ) நடப்பியல் ஆ) தத்துவியல் இ) இலக்கியத் திறனாய்வு ஈ) திறனாய்வு
7)வடம் (கயிறு)/ ஒட்டகம் என்ற இருபொருளுக்குரிய சொல்
அ) ஊயஅநட ஆ) ஊழுற இ) ர்ழசளந ஈ) சுழிந
8)கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் -------- என்று குறிப்பிடுவார்கள். அ) பயன்கலை ஆ) நிகழ்கலை இ) கவின்கலை ஈ) ஆயக்கலை
9)அருந்துணை என்பதைப் பிரித்தால்
அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை
10)"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது அ) தமிழ் ஆ)அறிவியல்இ)கல்வி ஈ) இலக்கியம்
11)சதாவதானி என்பது அ) நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டுவது ஆ) ஆயிரம் யானைகளைப் போரில் கொல்வது இ) நூறு மலர்களை ஒரே இடத்தில் குவிப்பது ஈ) ஆயிரம் பேருக்கு உணவிடுவது
12)"கற்றவர் வழி அரசு செல்லும்" என்று கூறுவது அ) காப்பிய இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம் இ) சங்கஇலக்கியம் ஈ) நீதி இலக்கியம்
13)செய்கு தம்பிப் பாவலர் இவ்வாறு அழைக்கப்படுகிறார்
அ) சதாவதானி ஆ) தசாவதானி இ) மொழி ஞாயிறு ஈ) கவிமணி
14)தோண்டும் அளவு நீர்போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும் என்று கூறுவது
அ) நாலடியார் ஆ) திருக்குறள் இ) ஏலாதி ஈ) திரிகடுகம்

15)இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர்------- இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ------
அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன் இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்
16)திருவிளையாடற்புராணத்தின் ஆசிரியர் யார், அ) சமணமுனிவர் ஆ) அகத்தியர் முனிவர் இ) பரஞ்சோதி முனிவர் ஈ) இடைக்காடனார்
17)திருவிளையாடற்புராணம் படலங்களின் எண்ணிக்கை அ) 64 ஆ) 96 இ) 30 ஈ) 18
18)"தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை யாருக்குக் கவரி வீசினான்,
அ) பரஞ்சோதி முனிவர் ஆ) கபிலர் இ) இடைக்காடனார் ஈ) மோசிகீரனார்
19)வேப்ப மாலை அணிந்த மன்னன்,
அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்
20)கபிலரின் நண்பர் அ) மாங்குடி மருதனார் ஆ) இடைக்காடனார் இ) கணிமேதாவியார் ஈ)பூதஞ்சேந்தனார்
21)சொல்லின் வடிவாக இறைவனின் இடப்புறம் வீற்றிருப்பவள்
அ) பாா்வதி ஆ) திருமகள் இ) கலைமகள் ஈ) தெய்வயானை
22)பரஞ்சோதி முனிவர் ------ நூற்றாண்டைச் சேர்ந்தவர். அ) 10 ஆ) 17 இ) 18 ஈ) 15
23)அமெரிக்க கறுப்பினப் பெண்மணி மேரி மெக்லியோட் -------- சமூகங்களின் ஒரு குரலாக இருந்தவர்.
அ) உலகெங்கும் மூலை முடுக்குகளில் உள்ள ஒடுக்கப்பட்ட/ கல்வி மறுக்கப்பட்ட
ஆ) கைவிடப்பட்ட/ நோய்வாய்ப்பட்ட இ) மறுமணம் மறுக்கப்பட்ட ஈ) உழைக்கும்
24)இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்டது -------வினா. "அதோ அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது -------விடை.
அ) ஐயவினா/ வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா/ மறைவிடை
இ) அறியாவினா/ சுட்டுவிடை ஈ) கொளல் வினா/ இனமொழி விடை
25)உடன்பட்டுக் கூறும் விடை அ) சுட்டுஆ) மறைஇ) நேர் ஈ) ஏவல் 26)ஆடத்தெரியுமா என்ற வினாவிற்குப் பாடத்தெரியும் என்று கூறுவது
அ) வினாஎதிர்வினாதல் ஆ) உற்றது உரைத்தல் இ) உறுவது கூறல் ஈ) இனமொழி
27)ஆசிரியர் மாணவனிடம் இப்பாடலின் பொருள் யாது? எனக் கேட்பது
அ) அறிவினா ஆ) ஐயவினா இ) அறியாவினா ஈ) கொளல்வினா
28)ஒரு செய்யுளில் சொற்கள் முறையே பிறழாமல் நிரல் நிறையாக அமைந்து வருவது அ) நிரல் நிறை ஆ) விற்பூட்டு இ) ஆற்று நீர் ஈ) மொழிமாற்று
29)வினா --------- வகைப்படும். அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு
30)விடை --------- வகைப்படும். அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது
31)பொருள்கோள் -------- வகைப்படும். அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9
32)நிரல் நிறைப் பொருள்கொள் --------வகைப்படும்.
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு

## இயல்:6

1) கம்பர் இராமாயணத்திற்கு இட்ட பெயர் எது,
அ) இராமகாதை ஆ) இராமாயணம் இ) கம்பராமாயணம் ஈ) இராமாவதாரம்
2) பாய்ச்சல் என்னும் சிறுகதையின் ஆசிரியர்
அ) ஜெயகாந்தன் ஆ) சா. கந்தசாமி இ) ஜெயமோகன் ஈ) அகிலன்

3)தேவராட்டத்தில் எத்தனை கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்பது மரபு, அ) 3 முதல் 13 ஆ) 8 முதல் 10 இ) 10 முதல் 13 ஈ) 8 முதல் 13

4)கரகாட்டத்தை வேறு எவ்வாறு அழைக்கலாம்,

அ) குட ஆட்டம் ஆ) கும்பாட்டம் இ) கொம்பாட்டம் ஈ) செம்பாட்டம்

5)காவடியாட்டம் இச்சொல்லில் "கா" என்பதன் பொருள்

அ) சோலை ஆ) பாரத்தாங்கும் கோல் இ) கால் ஈ) காவல்

6)தேவராட்டம் என்பது யார் மட்டுமே ஆடும் ஆட்டம்,

அ) ஆண்கள் ஆ) பெண்கள் இ) சிறுவர்கள் ஈ) முதியவர்கள்

7)உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படுவது

அ) தேவதுந்துபி ஆ) சிங்கி இ) டோலக் ஈ) தப்பு

8)தேவதுந்துபி என்னும் இசைக்கருவி பயன்படுத்தும் ஆட்ட வகை

அ) கரகாட்டம் ஆ) மயிலாட்டம் இ) தேவராட்டம் ஈ) சேவையாட்டம்

9)புரவி ஆட்டம்/ புரவி நாட்டியம் என்ற பெயர்களில் அளர்க்கப்படும் ஆட்டம்

அ) மயிலாட்டம் ஆ) ஒயிலாட்டம் இ) பொய்க்கால் குதிரையாட்டம் ஈ) காவடியாட்டம்

10)பாடல்கள் பயன்படுத்தாத ஆட்ட வகை

அ) கரக ஆ) பொய்க்கால் குதிரை இ) காவடி ஈ) மயில்

11)தப்பு- அ) தோற்கருவிஆ)துளைக்கருவி இ)நரம்புக்கருவிஈ)தொழிற்கருவி

12)தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது

அ) கரகாட்டம் ஆ) காவடியாட்டம் இ) புலி ஆட்டம் ஈ) ஒயிலாட்டம்

13)நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றவர்

அ)ந.முத்துசாமி ஆ)சங்கரதாசு சுவாமிகள்இ)பரிதிமாற்கலைஞர்ஈ)தி.வை. நடராசன்

14)கலைஞாயிறு என்று அழைக்கப்பட்டவர் அ) தேவநேயப் பாவாணார்

ஆ) ந. முத்துசாமி இ) தியாகராஜ பாகவதர் ஈ) எம்.எஸ். சுப்புலட்சுமி

15)அருச்சுனன் தபசு எனப்படுவது

அ) பொருள் வேண்டி நிகழ்த்தப்படுவது ஆ) மழை வேண்டி நிகழ்த்தப்படுவது இ) அருள் வேண்டி நிகழ்த்தப்படுவது ஈ) அமைதி வேண்டி நிகழ்த்தப்படுவது

16) மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடும் நூல்

அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) அகநானூறு ஈ) புறநானூறு

17)மலர்கள் தரையில் நழுவும், எப்போது? அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

18)இந்தப் பூவைத்தொடுப்பது எப்படி, என்ற கவிதையை எழுதியவர்

அ) உமா மகேஸ்வரி ஆ) இரா. மீனாட்சி இ) இந்திர பார்த்தசாரதி ஈ) தாமரை

19) பாய்ச்சல் கதையில் இடம் பெறுபவர்

அ) அனுமார் ஆ) இராமன் இ) வாலி ஈ) இராவணன்

20)முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழை இயற்றியவர்

அ)குமரகுருபரர் ஆ)இராமலிங்க அடிகள்இ) தாயுமானவர் ஈ) செயங்கொண்டார்

21) செங்கீரைப்பருவம் பிள்ளைத்தமிழில் எந்தப் பருவம், அ) 2 ஆ) 4 இ) 5 ஈ) 1

22)குமரகுருபரரின் காலம் ---------ஆம் நூற்றாண்டு. அ) 16 ஆ) 17 இ) 18 ஈ) 19

23)சிற்றிலக்கியங்களின் வகைகள் அ) 16 ஆ) 64 இ) 96 ஈ) 108

24) பிள்ளைத்தமிழில் இடம் பெறும் பருவங்கள் அ) 8 ஆ) 10 இ) 12 ஈ) 7

25)பிள்ளைத்தமிழில் இருவருக்கும் பொதுவான பருவங்கள் அ)6 ஆ)7இ) 8ஈ) 10

26)"சிறு பண்டி சரிந்தாட" என்பதில் "பண்டி" என்பதன் பொருள்
அ) வயிறு ஆ) பெருக்கம் இ) தலை ஈ) சுருக்கம்
27)கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன, அ) நல்ல உள்ளம் உள்ளவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால் இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
29)கம்பர் பிறந்த ஊர் அ) திருவழுந்தூர் ஆ) திருக்கடையூர் இ) திருவாரூர் ஈ) திருவெண்காடு
30)கம்பராமாயணத்திலுள்ள காண்டங்கள் அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9
31)சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்ற புலவர்
அ) கம்பர் ஆ) புகழேந்தி இ) ஒட்டக்கூத்தர் ஈ) ஔவையார்
34) பொழுது எத்தனை வகைப்படும், அ) இரண்டு ஆ)மூன்று இ) நான்கு ஈ) ஆறு
35)ஐந்திணைகளுக்கு உரியன
அ) முதற்பொருள் ஆ) கருப்பொருள் இ) உரிப்பொருள் ஈ) மூன்றும்
36)மணலும் மணல் சார்ந்த இடமும் ? எத்திணைக்குரியது,
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) பாலை

## இயல்:ஏழு

1)சிறந்த அமைச்சருக்குரிய குண நலன்கள் அ) 4 ஆ) 5 இ) 3 ஈ) 6
2)விடாமுயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குழு அ) உயர்ந்து விளங்கும் ஆ) தாழ்ந்து நிற்கும்
இ) வாழப் போகும் ஈ) காணாமல் நீங்கும்
3)"மாலவன் குன்றம் போனாலென்ன, வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்"மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே
அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
4)தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
5)ம.பொ.சி.க்கு பெற்றொர் இட்ட பெயர்
அ) சிவஞானம் ஆ) ஞானப்பிரகாசம் இ) பிரகாசம் ஈ) பொன்னுசாமி
6)ம.பொ.சியின் இயற்பெயரை மாற்றிய முதியவர்
அ) பொன்னுசாமி ஆ) சரவணன் இ) சரபையர் ஈ) சிவஞானி
7)காந்தியடிகள் சத்தியாகிரகம் என்னும் அறப்போர் முறையைத் தொடங்கிய ஆண்டு அ) 1806 ஆ) 1906 இ) 1916 ஈ) 1919
8) ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கான இரண்டுவழிகள் அ)கல்வி,கேள்வி ஆ) கல்வி,ஓவியம் இ) கலை,பண்பாடு ஈ) கலை,மேடைப்பேச்சு
9)வடக்கெல்லைத் தமிழ்மக்களை தமிழுணர்வு கொள்ளச் செய்தவர்.
அ) ம.பொ.சிவஞானம் ஆ) மங்கலங்கிழார் இ) மங்களநாதன் ஈ) ஜீவானந்தம்
10)தமிழினத்தின் பொதுச் சொத்து என்று போற்றப்படும் நூல்
அ) கம்பராமாயணம் ஆ) மகாபாரதம் இ) சீவகசிந்தாமணி ஈ) சிலப்பதிகாரம்
11)தலைநகர் காக்க முதல்வர் பதவியையும் துறக்கத் துணிந்தவர்
அ) அறிஞர் அண்ணா ஆ) காமராஜர் இ) இ. இராஜாஜி ஈ) கருணாநிதி
12)"சிற்றகல் ஒளி" இடம் பெற்ற நூல்

அ) எனது போராட்டம் ஆ) என் பயணம் இ) என் விருப்பம் ஈ) என் பாதை
13)ம.டிபா.சிவஞானத்தின் சிறப்புப் பெயர்
அ) சொல்லின் செல்வர் ஆ) நாவலர் இ) சிலம்புச் செல்வர் ஈ) சிலம்பு அறிஞர்
14) பூக்கள் இடம்பெறும் புறத்திணைகள் அ) 8 ஆ) 12 இ) 6 ஈ) 4
15)மா.பொ.சிக்குக் கேள்வி ஞானம் பெருக்கியவர் அ) அன்னை ஆ) திருப் பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் இ) மங்கலங்கிழார் ஈ) மார்சல் ஏ.நேசமணி
16)"தலையைக் கொடுத்தாவது தலைநகரைக் காப்போம்" என்று முழங்கியவர் அ) மா.பொ.சி ஆ) செங்கல்வராயன்இ)மங்கலங்கிழார்ஈ) மார்சல் ஏ.நேசமணி
17)சங்கத்தமிழரின் திணை வாழ்வு எதை அடிப்படையாகக் கொண்டது,
அ) நெசவை ஆ) போரினை இ) வேளாண்மையை ஈ) கால்நடையை
18)தமிழர் பண்பாட்டின் மகுடமாகத் திகழ்வது
அ) நாகரிகம் ஆ) கலை இ) உழுதல் ஈ) பொன் ஏர் பூட்டுதல்.
19)"ஏர் பதிதா" என்னும் கவிதை இடம் பெற்ற நூல்.
அ) அகலிகை ஆ) ஆத்மசிந்தனை இ) கு.ப.ரா. படைப்புகள் ஈ) ஏர்முனை
20)"கடுகி செல்" ? இதில் "கடுகி" என்பதன் பொருள்
அ) செல்லுதல் ஆ) மெதுவாக இ) விரைந்து ஈ) இயல்பாக
21). நிலம் சிலிர்க்கும், நாற்று அ) வளரும் ஆ) வளையும் இ) நிமிரும் ஈ) நெகிழும்
22)உலகத்தார்க்கு அச்சாணி என்போர்
அ) தொழுவோர் ஆ) கற்போர் இ) உழுவோர் ஈ) போரிடுவோர்
23)"தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்.
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்.
24)மெய்க்கீர்த்திக்கு முன்னோடியாய்த் திகழும் சங்க இலக்கியப்பாடல்கள்
அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து இ) குறுந்தொகை ஈ) அகநானூறு
25)யாருடைய காலந்தொட்டு மெய்க்கீர்த்தி கல்லில் வடிக்கப்பட்டது
அ) பல்லவர் ஆ) பாண்டியர் இ) முதலாம் இராசராசன் ஈ) இராஜேந்திர சோழன்
26) களஞ்சியம் மகளிர் குழு முதன் முதலில் ஆரம்பித்தவர்.
அ) சின்னப்பாப்பா ஆ) சின்னத்துரை இ) சின்னப்பிள்ளை ஈ) சரசுவதி
27)சோழநாட்டில் சிறைப்படுவன அ) மாஆ) வண்டுகள் இ) வருபுனல் ஈ)காடுகள்
28)திசாபாலர் --------ஆவார். அ) அறுவர் ஆ) எழுவர் இ) எண்மர் ஈ) பதின்மர்
29)மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறும் நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) வளையாபதி ஈ) குண்டலகேசி
30)சிலப்பதிகாரத்தில் உள்ள காண்டங்கள் அ) 5 ஆ) 7 இ) 3 ஈ) 9
31)அடிகள் நீரே அருளுக" என்ற இளங்கொவை வேண்டிக் கொண்டவர்
அ) கம்பர் ஆ) கபிலர் இ) திருத்தக்கதேவர் ஈ) சீத்தலைச்சாத்தனார்
32)சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ------- ஆகும். அ) இணைகாப்பியம் ஆ) முதற்காப்பியம் இ) பினைகாப்பியம் ஈ) இரட்டைக்காப்பியம்
33. "வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்" இவ்வடிகளில் அமைந்த நயம் அ) எதுகை ஆ) மோனை இ) முரண் ஈ) இயைபு
34)1954இல் தாமரையணி விருது பெற்றவர். அ) சின்னப்பிள்ளை

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

ஆ) பாலசரசுவதி இ) எம்.எஸ். சுப்புலட்சுமி ஈ) ராஜம் கிருஸ்ணன்
35)எம்.எஸ். சுப்புலட்சுமி தொட்டுத் தடவிப் பாராட்டியவர்
அ) சரோஜினி நாயுடு ஆ) கமலாநேரு இ) ஹெலன் கெல்லர் ஈ) மீரா 36)சமூக அவலங்களை எழுத்தின் வழியாக உலகுக்குக் காட்டியவர்.
அ) ராஜம்கிருஸ்ணன் ஆ) கிருஷ்ணம்மாள்இ) பாலசரசுவதி ஈ) எம்.எஸ்சுப்புலட்சமி

## இயல்:8

1)மேன்மை தரும் அறம் என்பது அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது. இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது.
2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் அ) உதியன் : சேரலாதன் ஆ) அதியன் : பெருஞ்சாத்தன் இ) பேகன் : கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் திருமுடிக்காரி
3)சங்கப் பாடலில் அறம் பற்றிய கருத்துகள் யாரை முதன்மைப்படுத்தியே கூறப்படுகிறது,
அ) வீரர்களை ஆ) மக்களை இ) அமைச்சர்களை ஈ) அரசர்களை
4) மதுரையின் அவையம் பற்றிக் குறிப்பிடும் நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) மதுரைக்காஞ்சி இ) பரிபாடல் ஈ) மதுரைக் மும்மணிக்கோவை
5)"பிழையா நன்மொழி" என்று வாய்மையைக் குறிப்பிடும்நூல்
அ) கலித்தொகை ஆ) புறநானூறு இ) நற்றிணை ஈ) கொன்றை வேந்தன்
6)நம்மிடமுள்ள அதிசயத் திறவுகோல் எது,
அ) மூளை ஆ) நாக்கு இ) கண் ஈ) கை
7)சேர அரசர்களின் கொடைப் பதிவாகவே திகழும் நூல். அ) புறநானூறு ஆ) பரிபாடல் இ) பதிற்றுப்பத்து ஈ) சிலப்பதிகாரம்
8)"செம்மை சான்ற காவிதி மாக்கள்" என்று அழைக்கப்பட்டவர் அ) அமைச்சர்கள் ஆ) மன்னர்கள் இ) புலவர்கள் ஈ) சான்றோர்கள்
9)தனிச் சிறப்புப் பெற்றிருந்த அவையம் அமைந்திருந்த இடம் அ) உறையூர் ஆ) மதுரை இ) திருநெல்வெலி ஈ) மாமல்லபுரம்
10)சங்க இலக்கியங்கள் பேசும் சிறந்த அறம்
அ) உதவி ஆ) கொடை இ) வாய்மை ஈ) பொருள்
11)வீட்டைத் துடைத்து சாயம் அடித்தல் ? இவ்வடி குறிப்பிடுவது அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
12)"மீட்சி விண்ணப்பம்"கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்
அ) வேணுராம் ஆ) வேணுகோபாலன் இ) சி.சு. செல்லப்பா ஈ) கபிலன்
13)"ஞானம்" கவிதை உணர்த்தும் பொருள்
அ) சமூக அறப்பணி ஆ) வீட்டைப் புதுப்பித்தல் இ) இடைவிடாத சமூக அறப்பணியை ஈ) உலகப் பணிகள்
14)காலக்கழுதை இலக்கணக்குறிப்பு தருக.
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உருவகம் ஈ) உவமத்தொகை
15)காலக் கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்
அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது. இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என் மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
16)"மாற்றம் எனது மானிடத் தத்துவம்""கவிஞன் யானோர் காலக் கணிதம்" என்று கூறியவர்

www.Padasalai.Net

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கண்ணதாசன்
17)காலத்தை வெல்பவன்
அ) ஆசிரியர் ஆ) அரசர் இ) கவிஞன் ஈ) ஓவியன்
18)சாகித்ய அகாதமி விருது பெற்ற கண்ணதாசனின் நூல் அ) மாங்கனி ஆ) இயேசு காவியம் இ) சேரமான் காதலி ஈ) சிவகங்கைச் சீமை
19)தமிழக அரசின் அரசவைக் கவிஞர் அ) பாரதியார் ஆ) கண்ணதாசன் இ) வைரமுத்து ஈ) மேத்தா
20)ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது அ) பிரம்மகமலம் ஆ) செண்பகம் இ) குறிஞ்சி ஈ) முல்லை
21)தலைமுறைக்கு ஒருமுறை மட்டுமே மலர்வது அ) மூங்கில் ஆ) குறிஞ்சி இ) கமலம் ஈ) செண்பகம்
22)பிறவிப் பிணியைத் தீர்க்கும் அருமருந்து அ) திருமந்திரம் ஆ) திருநீறு இ) மந்திரம் ஈ) துறவு
23)தண்டு கொடிக்கு இணையானவர்கள் யாவர்,
அ) பூரணர் ஆ) கூரேசர் இ) முதலியாண்டான்,கூரேசர் ஈ) இராமானுசர்
24)பூரணரின் மகன் பெயர் அ) நாராயணன் ஆ) சௌம்ய நாராயணன் இ) சௌம்ய ராஜன் ஈ) முதலியாண்டான்
25)சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
26)வெண்பாக்களின் வகைகள் அ) 4 ஆ) 6 இ) 5 ஈ) 7
27) ஆசிரியப்பாவின் வகைகள் அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 6
28)ஏகாரத்தில் முடியும் சிறப்படைய பா வகை அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
29)புலவர் குழந்தை இயற்றிய யாப்பு நூல் அ) யாப்பதிகாரம் ஆ) யாப்பருங்கலம் இ) யாப்பருங்காலகாரிகை ஈ) நன்னூல்
30)யாப்பின் உறுப்புகள் அ) 3 ஆ) 5 இ) 6 ஈ) 7

## இயல்:9

1)சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல் இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
2)கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன். இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார். ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார். இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார். ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.
3)மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர்
அ) ஜெயகாந்தன் ஆ) ஜெயமோகன் இ) புதுமைப்பித்தன் ஈ) சுஜாதா
4)சாகித்ய அகாதெமி விருது பெற்ற ஜெயகாந்தனின் புதினம் அ) கங்கை எங்கே போகிறாள் ஆ) யாருக்காக அழுதாள் இ) சில நேரங்களில் சில மனிதர்கள் ஈ) இமயத்துக்கு அப்பால்
5)தர்மார்த்தங்களை உபதேசிக்கவே பாரதத்தை எழுதியவர் அ) வியாசர் ஆ) கம்பர் இ) வில்லிபுத்தூரார் ஈ) பாரதியார்
6)"தர்க்கத்திற்கு அப்பால்" சிறுகதை அமைந்த தொகுப்பு அ) ரிஷிமூலம் ஆ) யுகசந்தி இ) குருபீடம் ஈ) ஒரு பிடி சோறு

7)தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரை எழுதும் பழக்கம் உடையவர் அ) மேத்தா ஆ) சுஜாதா இ) ஜெயமோகன் ஈ) ஜெயகாந்தன்

8)சோவியத் நாட்டின் விருது பெற்ற ஜெயகாந்தனின் நூல் அ) உன்னைப்போல் ஒருவன் ஆ) இமயத்துக்கு அப்பால் இ) புதிய வார்ப்புகள்
ஈ) ஒரு மனிதன் ஒருவீடு ஒரு உலகம்

9)சிறுகதை மன்னன் படிக்காத மேதை என்று சிறப்பிக்கக் கூடியவர் அ) அகிலன் ஆ) ஜெயகாந்தன் இ) புதுமைப்பித்தன் ஈ) கல்கி

10)கலைப்பணி என்றாலே அதனுள் அடங்குவது
அ) மானுடம் ஆ) சமூகப்பார்வை இ) நன்னெறி
ஈ) நாட்டுப்பற்று

11)"இவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான் எப்போதும்" இவ்வடிகளில் கற்காலம் என்பது
அ) தலைவிதி ஆ) பழையகாலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

12)நாகூர் ரூமியின் இயற்பெயர் யாது?
அ) முகமதுரபி ஆ) முகமது மீரான் இ) முகமது இஸ்மாயில் ஈ) முகமது

13)சிறிதளவே சலனத்தை ஏற்படுத்துவது
அ) தலைக்கனம் ஆ) அடுத்தவர் கனவு இ) சித்தாளின் மரணம் ஈ) சித்தாளின் புலம்பல்

14)நதியின் கால்கள் என்பது நாகூர் ரூமியின்
அ) கவிதைத் தொகுதி ஆ) படைப்புகள் வெளியான இதழ் இ) நாவல் ஈ) சிறுகதைத் தொகுதி

15)"கப்பலுக்குப் போன மச்சான்" என்பது நாகூர் ரூமியின் அ) கவிதை ஆ) படைப்புகள் வெளியான இதழ் இ) நாவல் ஈ) சிறுகதைத் தொகுதி

16)தன் வாழ்வு தொலைக்காமல் காக்க தலையில் கை வைப்பவர்
அ) சித்தாளு ஆ) பொறியாளர் இ) உழவர் ஈ) காவலர்

17)தொழிலாளர்களின் மனச் சுமையை அறியாதது.
அ) கட்டடம் ஆ)செங்கற்கள் இ) கம்பிகள் ஈ) மணல்

18)பூக்கையைக் குவித்துப் பூவே பரிவோடு காக்க என்று -----------வேண்டினார்.
அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத் தமக்காக இ) கருணையன் பூக்களுக்காக
ஈ) எலிசபெத் பூமிக்காக

19)கிறிஸ்துவுக்கு முன் தொன்றியவர் அ) பேதுரு ஆ) ஆபிரகாம் இ) திருமுழுக்கு யோவான்
ஈ) சூசை

20)கருணையனின் தாயார் யார்?
அ) எலிசபெத் ஆ) மரியாள் இ) சாரா ஈ) அண்ணாள்

21)தேம்பா அணி என்பதன் பொருள்
அ) வாடாத மாலை ஆ) சூடாத மாலை இ) பாடாத மாலை ஈ) தேன்மாலை

22)தேம்பாவணியின் படலங்கள் அ) 33ஆ)35இ)36ஈ) 39

23)தேம்பாவணியை இயற்றியவர் யார்?
அ) கபிலர் ஆ) கால்டு வெல் இ) வீரமாமுனிவர் ஈ) ஜி.யு.போப்

24)தமிழ் முதல் அகராதி எது? அ) சதுர் அகராதி ஆ) தமிழ் அகராதி இ) தொன்மை அகராதி
ஈ) பழைய அகராதி

25) வீரமாமுனிவரின் இயற்பெயர் -------- ஆகும். அ) கான்சுடான்சு சோசப் பெசுகி ஆ) தாமஸ் பெஸ்கி இ) இஸ்மத் ஈ) கால்டுவெல்

www.Padasalai.Net

26) ஒருவன் இருக்கிறான் கதை வெளியான இதழ் அ) கலைமகள் ஆ) கணையாழி இ) குமுதம் ஈ) ஆனந்தவிகடன்

27) மக்களுக்கு அழகு சேர்ப்பன ------ஆகும். அ) அணிகலன்கள் ஆ) கலை இ) கல்வி ஈ) பேச்சுத்திறன்

28)தீவகம் என்ற சொல்லின் பொருள்

அ) விளக்கம் ஆ) சான்று இ) விளக்கு ஈ) வெளிச்சம்

29)"கோவலனும் கண்ணகியும்"------- நகருக்குள் சென்றபோது கொடிகள் அசைந்தன.

அ) தஞ்சை ஆ) புகார் இ) மதுரை ஈ) வஞ்சி

30)தன்மை அணியை -------- என்றும் கூறுவர்.

அ) தீவக அணி ஆ) உவமை அணி இ) தன்மை நவிற்சி அணி ஈ) தற்குறிப்பேற்ற அணி

**கோ.மாலினி**
**முதுகலைத் தமிழ் ஆசிரியை**
**ஆதிபராசக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி**

www.Padasalai.Net